கலைஞர் 100
1924 - 2023

ENTREPRENEURSHIP DEVELOPMENT AND INNOVATION INSTITUTE
(An autonomous society of the Government of Tamil Nadu)

R. Ambalavanan IA&AS.,
Director

பெறுநர்

இயக்குநர்,

பள்ளிக்கல்வி இயக்குநரகம்,

சென்னை-600 006.

**கடிதம் எண்.319/SIDP/ EDII/2024, நாள்: 09.08.2024**

அய்யா,

பொருள்: மாண்புமிகு அமைச்சர் சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பு - தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பள்ளி கல்வி துறையுடன் இணைந்து செயல்படுத்தல் - தொடர்பாக.

பார்வை: குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் சட்டப்பேரவை அறிவிப்பு எண்: 33, நாள்: 28.06.2024.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் அவர்களின் சட்டப் பேரவை பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்.

**" 6-ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு "பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் (SIDP)" :ரூ.4.11 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தி செயல்படுத்தப்படும்".**

மேற்படி அறிவிப்பினை 2024-25 ல் பள்ளிக்கல்வித்துறை மற்றும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதியம் (UNICEF) இணைந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத்திட்டத்தில் 2024-25 ஆண்டிற்கான பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ள செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | செயல்பாடுகள் | நிலை | நாட்கள் | மாதம் |
|---|---|---|---|---|
| 1. | SIDP 3.O Launch- Inaugural and CEO Orientation | EDII-TN (Online) | 1/2 நாள் (அரை நாள்) | ஆகஸ்டு 2024 |
| 2. | முதன்மை பயிற்சியாளர்கள் பயிற்சி (Master Trainers Training) | மாநில அளவில் | 6 நாட்கள் (2 + 2 + 2) | ஆகஸ்டு 2024 |
| 3. | முதல் கட்ட திட்டப் பயிற்சி (ECO's & DC's) One day Orientation | சென்னை மற்றும் மதுரை | 1 நாள் | ஆகஸ்டு 2024 |
| 4. | வழிகாட்டி ஆசிரியர்களுக்கான 1 நாள் பயிற்சி (Guide Teacher Training) | மாவட்ட அளவில் | 1 நாள் | செப்டம்பர் 2024 |
| 5. | ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு (SIDP 3.OAwareness at School Level) | பள்ளியளவில் | 1/2 நாள் | செப்டம்பர் 2024 |
| 6. | மாணவ அணிகள் உருவாக்குதல், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு இணையதள வாயிலான பயிற்சிகள் (E-Learning) | பள்ளியளவில் | 3 முதல் 5 நிமிடங்கள் வரையிலான 26 குறும்படங்கள் | அக்டோபர் மற்றும் நவம்பர் 2024 |
| 7. | அணிகள் புத்தாக்க கண்டுபிடிப்புக்களை சமர்ப்பித்தல் (Innovative Idea Submission) | பள்ளியளவில் | | நவம்பர் 2024 |
| 8. | சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளுக்கான மதிப்பீடு செய்தல் (Master Trainers cum Evaluators) | EDII-TN | 15 நாட்கள் | டிசம்பர் 2024 |
| 9. | மாவட்ட அளவிலான துவக்க முகாம்கள் (Boot Camp) | மாவட்ட அளவில் | 2 நாட்கள் | பிப்ரவரி 2025 |
| 10. | மாநில அளவிலான இறுதிப்போட்டி (State Level Final Pitch) | மாநில அளவில் | 2 நாட்கள் | மே 2025 |

2024-25 கல்வியாண்டில் தமிழகத்தில் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் (SIDP 3.O) அரசு, அரசு உதவிபெறும் மற்றும் பகுதி அளவில் உதவிபெறும் 8074 பள்ளிகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் வழிகாட்டி ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகுக்கின்றார்கள். எனவே உயர்நிலை பள்ளியில் (6 முதல் 10 வரை செயல்படும்) பள்ளிகளில் வழிகாட்டி ஆசிரியர் ஒருவர் மற்றும் (6 முதல் 12 வரை செயல்படும்) மேல்நிலை பள்ளிகளில் இரண்டு வழிகாட்டி ஆசிரியராக நியமிக்கப்பட வேண்டும்.

வழிகாட்டி ஆசிரியர்களை தேர்வு செய்யும்போது, அவர்கள் தன்னார்வுடையவர்களாக, எந்தவித பிரதிபலனும் எதிர்பாராத மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டுபவர்களாக இருத்தல் வேண்டும். குறிப்பாக முதுகலை ஆசிரியர்களாக இருந்தால் நல்லது.

வழிகாட்டி ஆசிரியர்களின் நியமனம் செய்து, அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட விவரத்தினை பின்வரும் படிவத்தில் பூர்த்தி செய்து வழங்க கேட்டுக் கொள்கிறோம்.

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | பள்ளியின் பெயர் | வகுப்பு | வழிகாட்டி ஆசிரியரின் பெயர் | | ஆசிரியர்களின் கைபேசி எண் (வாட்ஸ்அப்) | ஆசிரியர்களின் மின்னஞ்சல் முகவரி | பள்ளி மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பட்டதாரி ஆசிரியர் | முதுகலை ஆசிரியர் | | | |
| 1. | | | | | | | | |
| 2. | | | | | | | | |

நியமிக்கப்பட்ட வழிகாட்டி ஆசிரியர்கள் விவரங்கள் 14.08.2023 -க்குள் இவ்வலுகத்திற்கு sidp22-23@editn.in முகவரியில் தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தினை (SIDP 3.O) சிறப்பாக செயல்படுத்த மாவட்ட அளவில் உள்ள பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகளுக்கு தக்க அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கி பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஓம்/-

இயக்குநர்

துணை இயக்குநர்

**இணைப்பு**

1. பள்ளிகளின் விவரம்
2. பள்ளி புத்தாக்க திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களுக்கான கடமைகள்

**நகல்**

1. **மாநில திட்ட இயக்குநர்,**
   மாநில திட்ட இயக்குநரகம்,

2. **இணை இயக்குநர்**
   (நாட்டு நலப்பணித் திட்டம்), பள்ளிக்கல்வி இயக்குநரகம்,
   சென்னை -600 006.